**நீதித்துறை நடுவர் மன்றம் எண்.2, திண்டிவனம்.**

**முன்னிலை : திருமதி.M.அபிநயா.,B.A.,B.L.,**

**நீதித்துறை நடுவர் எண்.2. திண்டிவனம்,**

**2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26–ம் நாள் வியாழக்கிழமை**

**<u>ஆண்டு பட்டிகை வழக்கு எண்.33/2018</u>**

**<u>CNR No.TNVP11-000148-2018</u>**

| வ. எண் | விளக்கம் | : | விவரங்கள் | |
|---|---|---|---|---|
| 1 | குற்றமுறையீட்டாளரின் பெயர் மற்றும் முகவரி | : | காவல் உதவி ஆய்வாளர்,<br>மயிலம் காவல்நிலையம்,<br>விழுப்புரம் மாவட்டம்,<br>குற்ற எண்.820/2017. | |
| 172 | எதிரிகளின் பெயர் மற்றும் முகவரி | : | 1. வேணுகோபால், வயது 28/2018, த/பெ.குப்புசாமி,<br>2.ஆறுமுகம்,வயது53/2018, த/பெ.பட்டு, இருவரும்<br>நெ.113, மாரியம்மன் கோவில் தெரு, எடையப்பட்டு கிராமம், வீடூர் அஞ்சல், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம். | |
| 3 | எதிரிகள் கைது செய்யப்பட்ட அல்லது சரணடைந்த நாள் மற்றும் பிணையில் சென்ற நாள் | : | கைது/ சரணடைந்த நாள் | பிணையில் சென்ற நாள் |
| | | | A1–17.11.2017<br>A2–28.11.2017 | A1–22.11.2017<br>A2–28.11.2017 |
| 4 | குற்றம் நடந்த நாள் | : | 01.11.2017 | |
| 5 | கோப்பில் எடுத்த நாள் | : | 11.04.2018 | |
| 6 | எதிரிகள் ஆஜராகிய நாள் | : | A1, A2–12.06.2018 | |
| 7 | புகார் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | : | 11.04.2018 | |
| 8 | எதிரிகளிடம் பிரிவுகள் 228, 240, 246, 281 அல்லது 251 குவிமுச வின் கீழ் வினவப்பட்ட நாள் | : | 22.06.2018 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 9 | குற்றவியல் பல்வகை மனுக்கல் தாக்கல் செய்யப்பட்ட நாள் மற்றும் அதன் இறுதி உத்தரவின் மேலான மேல்முறையீடு எதுவும் இருப்பின் அந்த நீதிமன்றம் குறித்த விபரம் | : | 1.311 Crpc– Result:Allowed Dismissed<br>2.311 Crpc– Result:Allowed<br>3.311 Crpc– Result:Allowed | | |
| 10 | சாட்சிகளின் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை | : | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 02.12.2019 | இல்லை |
| | | | அ.சா.2 | 02.12.2019 | 04.05.2023 |
| | | | அ.சா.3 | 02.12.2019 | 04.05.2023 |
| | | | அ.சா.4 | 02.12.2019 | 04.05.2023 |
| | | | அ.சா.5 | 02.12.2019 | 04.05.2023 |
| | | | அ.சா.6 | 12.06.2023 | 12.06.2023 |
| | | | அ.சா.7 | 27.05.2025 | 27.05.2025 |
| | | | அ.சா.8 | 16.12.2025 | 16.12.2025 |
| | | | அ.சா.9 | 12.02.2026 | 12.02.2026 |
| 11 | சாண்றுபொருள் | : | இல்லை | | |
| 12 | எதிரிகளிடம் பிரிவு 313(1)(ஆ) குவிமுசவின் கீழ் வினவப்பட்ட நாள் | : | 23.03.2026 | | |
| 13 | விசாரணை முடிக்கப்பட்ட நாள் | : | 23.03.2026 | | |
| 14 | எதிரிகள் தலைமறைவாக இருந்த நாட்கள் மற்றும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நாள் | : | – | | |
| 15 | மேல் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தடை மற்றும் இறுதி உத்தரவு குறித்த விவரம். | : | --- | | |

| | | | |
|---|---|---|---|
| 16 | குற்றச்சாட்டுக்கள் | : | 1–வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 326, 506(2) IPC–ன் கீழும், 2–வது எதிரி மீது பிரிவுகள் 294(b), 506(2) IPC–ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. |
| 17 | சட்டப்பிரிவுகள் | : | 294(b), 326, 506(2) IPC |
| 18 | தீர்ப்புரை. | : | முடிவாக 1 மற்றும் 2 ம் எதிரிகளின் மீதான பிரிவுகள் 294(b), 506(ii) of IPC – ன் கீழ் குற்றச்சாட்டை அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளது. 1 மற்றும் 2ம் எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 506(ii) of IPC– ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மாணித்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றத்தால் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.<br>**(i)** 1 வது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான பிரிவு 326 of IPC ஆனது அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் எவ்வித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு நிரூப்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு வழங்கயிருந்த தண்டனை குறித்து கு.வி.மு.ச பிரிவு 248(2)–ன் கீழ் வினவியபோது, எதிரி குறைந்தபட்ச தண்டனை அளிக்கும்படி கூறினார்.<br>**(ii)** மேற்படி எதிரியின் பதிலினை அனுசரித்தும், குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் சங்கதிகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டும் 1 வது எதிரிக்கு பிரிவு 326 of IPC–ன் கீழான குற்றத்திற்கு 3 மாத காலம் சிறைதண்டனை மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | | | ரூ.10,000/- அபராதம் செலுத்தும்படியும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 2 வாரம் மெயக்காவல் சிறைதண்டனை அனுபவிக்கும்படியும், கு.வி.மு.ச பிரிவு 248(2)-ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. 1-வது எதிரி வழக்கு பதிவு செய்யப்பட்டபோது 6 நாட்கள் சிறையில் இருந்ததாக ஆவணங்களின் அடிப்படையில் தெரியவருவதால் 1-வது எதிரிக்கு வழங்கப்பட்டுள்ள சிறைதண்டனையில் மேற்படி 6 நாட்களை மட்டும் கழிக்கும்படி கு.வி.மு.ச 428-ன் படி உத்தரவிடப்படுகிறது. |

இந்த வழக்கானது கடந்த 12.12.2022 அன்று இந்நீதிமன்றக் கோப்பில் எடுக்கப்பட்டது. அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை-2 அவர்கள் முன்னிலையாகியும் எதிரிகளுக்காக வழக்கறிஞர் திரு.M.மாத்தமிழன், M.A..,B.L., அவர்கள் ஆஜராகியும் விசாரணைக்கு வரப்பெற்று இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட பின்பு வழக்கு ஆவணங்களையும் பரசீலிக்கப்பட்டு இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

## தீர்ப்புரை

**1.** இவ்வழக்கானது கடந்த 01.11.2017 ம் தேதி மாலை 04.00 மணிக்கு, சாட்சி-1 தனது நிலத்தில் பயிர் செய்திருந்த பூஞ்செடிகளுக்கு தண்ணீர் பாச்சிக்கொண்டிருந்த போது, எதிரிகள் இருவரும், சாட்சி-1ன் நிலத்தில் மாடுகளை மேய்த்து கொண்டிருந்ததை பார்த்து எதிரிகளை திட்டியதால், எதிரிகள் இருவரும், சாட்சி-1யை பார்த்து, டேய் தேவிடியா பையா, வெளியூரிலிருந்து வந்து எங்களிடமே தட்டி கேட்கிறாயா என்று அசிங்கமாக திட்டி, 1 வது எதிரி, சாட்சி-1ன் காலை பிடித்து இழுத்து கீழே தள்ளி, இரு கைகளையும் பிடித்து கொண்டு கருங்கல்லால் இடது கண்ணில் பலமாக

குத்தியும், எதிரிகள் இருவரும் சாட்சி–1 யை பார்த்து, இனிமேல் மாடு மேய்வதை கேட்டால், உன்னை இங்கேயே வெட்டி கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து, சாட்சி–1 க்கு கொடுங்காயம் ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளார்கள் என மயிலம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் எதிரிகள் மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**2.** எதிரிகளுக்கு நீதிமன்றத்தின் மூலம் கு.வி.மு.ச பிரிவு 204–ன் கீழ் அழைப்பானை சார்வு செய்யப்பட்டு எதிரிகள் நீதிமன்றத்தில் ஆஜராகிய போது அரசு தரப்பு வழக்கு ஆவணங்களின் நகல்கள் யாவும் கு.வி.மு.ச பிரிவு 207–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

**3.** இவ்வழக்கின் இறுதி அறிக்கையும் அதனுடன் இணைக்கப்பட்ட ஆவணங்களையும் பரிசீலனை செய்து வாதி தரப்பும் எதிரிகள் தரப்பும் கேட்கப்பட்டு எதிரிகள் குற்றம் செய்திருக்கிறார் என்று அனுமானிப்பதற்கு போதுமான முகாந்திரம் இருக்கிறது என்பதால் எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 326, 506(ii) IPC–ன் கீழ் குற்றச்சாட்டு வனையப்பட்டு அக்குற்றச்சாட்டை எதிரிகளுக்கு படித்து காட்டி விளக்கி வினவியபோது எதிரிகள் பொய் வழக்கு என்றும் குற்றவாளி இல்லை என்றும் மறுத்து விசாரணை செய்ய வேண்டும் என்றும் கூறினார்கள். எனவே, அதைத் தொடர்ந்து வழக்கு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டது.

**4.** அரசு தரப்பில் இவ்வழக்கில் மொத்தம் அ.சா.1 முதல் அ.சா.9 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சாண்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சாண்றுபொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில் அரசு தரப்பு சான்றாவணங்கள் குறியீடு செய்யும்

பொழுது பார்வை மகசரில் உள்ள சாட்சியிம் கையொப்பம் அ.சா.ஆ.1 அக குறியீடு செய்வதற்கு பதிலாக அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது அதனைத் தொடர்ந்து குறியீடு செய்யப்பட்ட விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்றிதழும் அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி சான்றாவணங்களின் வரிசை எண்கள் கீழ்கண்டவாறு மாற்றம் செய்யப்படுகிறது. பார்வை மகசரில் உள்ள சாட்சியின் கையொப்பம் அ.சா.ஆ. 1 ஆகவும், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச் சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆகவும் மாற்றம் செய்யப்படுகிறது.

**5.** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள சங்கதிகளை தொகுத்து கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)–ன் கீழ் எதிரிகளிடம் வினவியபோது எதிரிகள் அவர்களது சாட்சியங்கள் அனைத்தும் பொய்யானவை என்று கூறினார்கள். எதிரிகள் தரப்பில் சாட்சிகள் குறித்து வினவியபோது யாரும் இல்லை என்று கூறியதால் எதிரிகள் தரப்பில் சாட்சிகள், சாண்றாவணங்கள் மற்றும் சாண்றுபொருள் எதுவும் முன்னிறுத்தப்படவில்லை.

**6.** இவ்வழக்கில் தீர்மாணிக்கப்படவேண்டிய பிரச்சனை ஏதேனில் எதிரிகள் மீதான குற்றம் அரசு தரப்பால் நியாயமான சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? இல்லையா? என்பதேயாகும்.

**<u>7. தீர்வு:</u>**

இவ்வழக்கானது கடந்த 01.11.2017 ம் தேதி மாலை 04.00 மணிக்கு, சாட்சி–1 தனது நிலத்தில் பயிர் செய்திருந்த பூஞ்செடிகளுக்கு தண்ணீர் பாச்சிக்கொண்டிருந்த போது, எதிரிகள் இருவரும், சாட்சி–1ன் நிலத்தில் மாடுகளை மேய்த்து கொண்டிருந்ததை பார்த்து எதிரிகளை திட்டியதால், எதிரிகள் இருவரும், சாட்சி–1யை பார்த்து, டேய் தேவிடியா பையா,

வெளியூரிலிருந்து வந்து எங்களிடமே தட்டி கேட்கிறாயா என்று அசிங்கமாக திட்டி, 1 வது எதிரி, சாட்சி–1ன் காலை பிடித்து இழுத்து கீழே தள்ளி, இரு கைகளையும் பிடித்து கொண்டு கருங்கல்லால் இடது கண்ணில் பலமாக குத்தியும், எதிரிகள் இருவரும் சாட்சி–1யை பார்த்து, இனிமேல் மாடு மேய்வதை கேட்டால், உன்னை இங்கேயே வெட்டி கொலை செய்து விடுவோம் என்று கொலை மிரட்டல் விடுத்து, சாட்சி–1 க்கு கொடுங்காயம் ஏற்படுத்திய குற்றம் புரிந்துள்ளார்கள் என்பதே அரசு தரப்பு வழக்காகும்.

**08**. அ.சா.1 முனுசாமி தனது சாட்சியத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு ஐப்பசி மாதம் தேதி தனக்கு சரியாக தெரியவில்லை என்றும் தான் தனது கொள்ளையில் பூஞ்செடி வைத்து கொண்டிருந்தேன் என்றும், அப்போது எதிரிகள் தன் கொள்ளையில் மாடு மேய்த்தார்கள் என்றும் ஏன் இவ்வாறு கொள்ளையில் மாடு மேய்த்தீர்கள் என்று கேட்டதற்கு எதிரி ஆறுமுகம் தன்னை தெவிடியா மகனே தங்கள் ஊரில் எல்லையில் இடம் வாங்கி வைத்து கொண்டு தங்களை மாடு மேய்க்க என்று கூறி தன்னை வெட்டிக்கொலை செய்துவிடுவேன் என்று கூறினார் என்றும் 2–வது எதிரி வேணு தன் காலை பிடித்து இழுத்து போட்டு ஒரு கருங்கல்லால் தனது இடது கண்ணில் குத்தினார் என்றும் இதனால் தனக்கு இடது கண்ணின் அருகே இரத்தம் கொட்டியது அதிமாக இரத்தம் போனதால் தான் மயக்கம் அடைந்துவிட்டேன் என்றும் அதன்பிறகு தனக்கு எங்கிருந்தேன் என்று தெரியவில்லை என்றும் எதிரிகள் தன்னை தூக்கி சென்று தவளக்குப்பம் கண் மருத்துவமனையில் தன்னை அவரது தாத்தா என்று மருத்துவனையில் சேர்த்துவிட்டார்கள் என்றும் மருத்துவர்கள் கேட்டபோது தனக்கு தானாக குச்சி குத்திவிட்டது என்று கூறிவிட்டடார்கள் என்றும் இது சம்மந்தமாக தன் மகனிடமோ தன் உறவினரிடமோ தகவல் கூறவில்லை தனக்கு கண்ணில் பலத்த அடிபட்டுவிட்டது என்பதால் தன்னால் யாரையும் தகவல் தொடர்பு

கொள்ளவில்லை 2 நாள் கழித்து மருத்துவமனைக்கு வந்துவிட்டார் என்றும் இடது கண்ணில் இரத்த நாளம் கலங்கி கண் பாதிப்பு அடைந்துள்ளதால் இன்று வரை தன்னால் பார்க்க முடியவில்லை என்றும் 15 நாள் கழித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றும் தனக்கு கண்பார்வை தற்போது இல்லாததால் தன் புகார் மனுவை பார்த்து தான் கொடுத்த புகார் மனுவா என்று தன்னால் கூறவில்லை என்றும் எனவே இதுகுறித்து இது சம்மந்தமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**09.**அ.சா.2 பாண்டுரங்கன் தனது சாட்சியத்தில் கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் நினைவில்லை மாலை சுமார் 4 மணியளவில் அ.சா.1 நிலத்தில் அய்யோ அம்மா என்று சத்தம் கேட்டது என்றும் தான் ஓடிச்சென்று பார்த்தேன் என்றும் எடையப்பட்டுகிராமத்தை சேர்ந்த எடையப்பட்டு அ.சா.1 கீழே தள்ளி அடித்துகொண்டிருந்தார்கள் என்றும் நாங்கள் சத்தம் போட்டு ஓடவே எதிரிகள் அ.சா.1 ஐ விட்டு ஓடினர் தாங்கள் பார்த்த போது அ.சா.1 இடது கண் ஓரத்தில் கல்லால் குத்தி இரத்தம் ஓடிக்கொண்டிருந்தது என்றும் அதன் பிறகு எதிரிகள் அ.சா.1 அழைத்து சென்று மருத்துவம் பார்ப்பதாக கூறி மருத்துவம் பார்த்தார்கள் என்றும் இது சம்மந்தாமாக போலீசார் தன்னை விசாரணை செய்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**10.**அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 2 வருடத்திற்கு முன்பு தேதி, மாதம் நினைவில்லை என்றும், மாலை 4 மணியளவில் தான் வீடூர் மற்றும் எடையப்பட்டு எல்லையில் நைனார் கொல்லையில் ஆடு மேய்த்து கொண்டிருந்தேன் என்றும் அப்போது அ.சா.1 பூ கொல்லையில் லபோ லபோ என்று அலறல் சத்தம் கேட்டது என்றும் தான் ஓடி சென்று பார்த்தேன் என்றும், எதிரி வேணு ஒரு கல்லால் அ.சா.1–ன் கன்னத்தில் குத்தினார் என்றும் தாங்கள் சத்தம் போட்டு ஓடியதால் எதிரிகள் அங்கிருந்து ஓடினார்கள் என்றும் தான்

அ.சா.1 மகன் செல்வத்திற்கு செய்தி சொல்லுவதற்காக அங்கிருந்து வந்துவிட்டேன் என்றும் ஆனால் செல்வம் வீட்டில் இல்லை என்றும், அதனால் தான் வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றும் அதன் பிறகு என்ன நடந்தது என்று தனக்கு தெரியாது என்றும், 15 நாள் கழித்து போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**11.**அ.சா.4 தனது சாட்சியத்தில் கடந்த 2017 வருடம் ஐப்பசி மாதம் தேதி தனக்கு தெரியாது ஒரு நாள் மாலை 7.00 மணியளவில் தான் வேலைக்கு சென்றுவிட்டு வீட்டுக்கு வரும்போது பாண்டுரங்கள் தன்னிடம் எதிரிகள் தன் தந்தை கண்ணில் கல்லால் குத்தி போட்டு விட்டதாக கூறினார் என்றும் தான் சென்று தேடி பார்த்தேன் எங்கும் கிடைக்கவில்லை என்றும் இரண்டு நாட்கள் கழித்து தவளக்குப்பம் அரவிந்த் கண் மருத்துவமனையில் தன் தந்தை சிகிச்சையில் இருப்பதாக கேள்விப்பட்டு எதிரி வேணுகோபால் கல்லால் தன் தந்தை கண்ணில் குத்திவிட்டதாக கூறினார் என்றும், சிகிச்சை முடிந்துவந்து காவல் நிலையத்தல் புகார் கொடுத்தோம் என்றும் காவல் துறை தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**12.**அ.சா.5 தனது சாட்சியத்தில், கடந்த 01.11.2017 தேதி மாலை சுமார் 4 மணியளவில் தன் மாமனார் அ.சா.1 தங்கள் கழனியில் இருக்கும்போது எதிரிகள் மாடுவிட்டு மேய்த்ததாகவும், அதனால் சந்தேகப்பட்டு எதிரிகள் தன் கண்ணில் கல்லால் குத்திவிட்டதாகவும், மாலை சுமார் 6 மணியளவில் தங்களுக்கு தகவல் கிடைத்தது என்றும் தாங்கள் கழனிக்கு சென்று தங்கள் மாமனாரை தேடி பார்த்தோம் கிடைக்கவில்லை என்றும், 2 நாட்கள் கழித்து தவளக்குப்பம் கண் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்திருப்பதாக எதிரிகள் தகவல் சொல்லி அனுப்பினர் என்றும், தாங்கள் மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம் என்றும் தன் மாமனாரை எதிரிகள் தன் தாத்தா கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக பொய்

சொல்லி சிகிச்சைக்கு சேர்த்தது தெரியவந்தது என்றும், சிகிச்சையில் இருந்ததால் உடனடியாக புகார் கொடுக்க இயலவில்லை என்றும் சிகிச்சை முடிந்துவந்து காவல்நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்றும், இது சம்மந்தமாக காவல்துறையினர் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**13.**அ.சா.6 தனது சாட்சியத்தில் தான் தற்போது சென்னையில் வேலை செய்து வருகிறேன் என்றும் தன்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் தன்னுடையது தான் என்றும் அந்த கையொப்பம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு தான் மயிலம் காவல்நிலையத்தில் வைத்து மேற்கண்ட கையொப்பத்தை செய்தேன் என்றும் மற்றபடி வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.6–ன் சாட்சியத்தின் அடிப்படையில் அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி குறுக்கு விசாரணையின் பொழுது அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சங்கதிகளும் புலப்படவில்லை.

**14.**அ.சா.7 தனது சாட்சியத்தில் அ.சா.6 சந்திரசேகரனை தனக்கு தெரியும் என்றும் தன்னிடம் காட்டப்படும் ஆவணமான பார்வை மகசரில் உள்ள 2 வது கையொப்பம் தன்னுடையது அல்ல என்றும் இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தனக்கு தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரணை செய்யவில்லை என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அ.சா.7–ன் சாட்சியத்தின் அடிப்படையில் அவர் அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளார். மேற்படி குறுக்கு விசாரணையின் பொழுது அரசு தரப்பிற்கு ஆதரவாக எந்தவித சங்கதிகளும் புலப்படவில்லை.

**15.**அ.சா.8 தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது மேடவாக்கத்தில் உள்ள அரசு மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் முதல் நிலை உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன் என்றும் தான் கடந்த 16.11.2017 ஆம் ஆண்டு முண்டியம்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவு மருத்துவராக பணியில் இருந்த பொழுது சுமார் நண்பகல் 12.10 மணியளவில் சுமார் 70 வயது மதிக்கத்தக்க முனுசாமி த.பெ. தங்கவேல் அவருடைய விலாசம் ஜே.ஜே நகர், வீடூர் போஸ்ட், திண்டிவனம் தாலுக்கா, விழுப்புரம் மாவட்டம் என்னும் நபரை அவரது மகன் சிகிச்சைக்காக அழைத்து வந்தார் என்றும் அவர் தன்னிடம் அவருக்குத் தெரிந்த இரண்டு ஆண் நபர்கள் 01.11.2017 அன்று மாலை சுமார் 4:00 மணியளவில் எடையப்பட்டு என்ற இடத்திற்கு அருகில் அவரை கல்லால் இடது கண்ணில் அடித்தார்கள் என்று தன்னிடம் கூறினார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**16.** மேலும், அ.சா.8 தனது சாட்சியத்தில், அவரை தான் மேலும் பரிசோதித்த பொழுது சுயநினைவுடனும் அவருடைய ரத்த அழுத்தம் 110/70 mmHg இதயத்துடிப்பு 82/m என்றும், அவரை மேலும் பரிசோதித்த பொழுது அவருடைய இடது கண் சிவந்து காணப்பட்டது என்றும் அவரை மேல் சிகிச்சைக்காக வார்டு எண் 100 ல் S4 யூனிட்டில் உள்நோயாளியாக அனுமதித்து மேலும் அறுவை சிகிச்சை சிறப்பு மருத்துவரின் அறிவுரையை கேட்டிருந்தேன் என்றும் அறுவை சிகிச்சை நிபுணர் கண் மருத்துவர் அவர்களின் கருத்தின் அடிப்படையில் முனுசாமி என்பவரின் இடது கண்ணில் ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று சான்றளித்தேன் என்றும் அந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**17.**அ.சா.9 தனது சாட்சியத்தில் தான் தற்பொழுது ஒலக்கூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன் என்றும் கடந்த 16.11.2017 ம் தேதி மயிலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது 19.45 மணிக்கு வீடூர் கிராமத்தில் வசிக்கும் தங்கவேல் மகன் முனுசாமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று மயிலம் காவல் நிலைய குற்ற எண்.820/2017, U/S. 294(b), 324, 506(2) IPC-ன் படி வழக்கு பதிவு செய்தேன் என்றும் பின்னர் அசலையும் வாதியும் புகார் மனுவையும் இணைத்து நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் அந்த வாதியின் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 மற்றும் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**18.**மேலும் அ.சா.9 தனது சாட்சியத்தில் பின்னர் 17.11.2017 ம் தேதி காலை 8:30 மணிக்கு சம்பவயிடம் சென்று சாட்சிகள் சந்திரசேகரன், ராபர்ட் ஆகியவர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன் என்றும் அந்த மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் அ.சா.ஆ.5 மற்றும் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் பின்னர் அன்றைய தினமே சாட்சிகள் முனுசாமி, பாண்டுரங்கன், முருகன். செல்வம், மகாதேவி ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் சாட்சிகளின் விசாரணையில் இருந்தும் தனக்கு கிடைத்த ரகசிய தகவலின் பெயரில் சம்பவம் உண்மையான தெரியவர பொம்பூர் பஸ் நிறுத்தம் அருகே நின்றிருந்த எதிரி வேணுகோபால் வயது 27 த.பெ. குப்புசாமி மாரியம்மன் கோவில் தெரு, எடையப்பட்டு என்பவரை 17.11.2017-ம் தேதி 11.30 மணிக்கு காரணம் கூறி கைது செய்து கைதின்போது மாண்புமிகு உச்ச நீதிமன்ற கட்டளைகளை முறையாக நிறைவேற்றியப் பின் எதிரி பார்ட்டி சகீதம் பகல் 12:30 மணிக்கு நிலையம் வந்து எதிரியை திரேக சோதனைக்கு பின் பாராவசம் ஒப்புவித்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**19.**மேலும் அ.சா.9 தனது சாட்சியத்தில் பின்னர் காயம்பட்ட முனுசாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர் திரு. ராஜ்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் வாக்குமூலத்தில் சாட்சிக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினார் என்றும் பின்னர் வழக்கின் சட்ட பிரிவுகளை 294(b), 326, 506(ii) IPC ஆக பிரிவு மாற்றம் செய்து அந்த பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன் என்றும் அந்தப் பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் பின்னர் தலைமறைவு எதிரி ஆறுமுகம் பற்றி விசாரித்ததில் நீதிமன்ற பிணையில் சென்றுள்ளதாக தெரிந்து 19.12.2017-ம் தேதி அனைத்து விசாரணையும் முடித்து எதிரி 1-ன் செய்கையானது பிரிவுகள் 294(b), 326. 506(ii) IPC படியும் எதிரி 2-ன் செய்கையானது பிரிவுகள் 294(b), 506(ii) IPC-ன் படி இறுதி அறிக்கை தயார் செய்து கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**20.**அ.சா.1-ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அ.சா.1 தனது புகாரில் குறிப்பிட்டுள்ள விவரங்களுக்கு ஒத்துரைத்து சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1, 1-வது எதிரி தன்னை பேசிய ஆபாசமான வார்த்தை குறித்தும் தனக்கு கொலை மிரட்டல் விடுத்ததை குறித்தும் சாட்சியம் அளித்திருந்தாலும் மேற்படி விவரங்களை உறுதி செய்யும் வகையில் மற்ற சாட்சிகள் யாரும் சாட்சியம் அளிக்கவில்லை. மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் எதிரி வேணுகோபால் தன்னை காலை பிடித்து இழுத்து போட்டு ஒரு கருங்கல்லால் தனது இடது கண்ணில் குத்தினார் என்று தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

**21.** இவ்வழக்கில் அ.சா.1-ன் முதல் விசாரணை சட்டப்படி முறையாக மேற்கொள்ளப்பட்டு, அ.சா.1-ன் சாட்சியம் சத்தியப்பிரமாணத்தின் கீழ்

பதிவுசெய்யப்பட்டுள்ளது. அச்சமயம் எதிரியும் அவரது வழக்கறிஞரும் முன்னிலையில் இருந்தபோதிலும், அ.சா.1–ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை என்பது ஆவணங்களை பரிசீலனை செய்கையில் தெளிவாகிறது. குறுக்கு விசாரணை செய்யும் வாய்ப்பு இருந்தும் அதை பயன்படுத்தாமல் விடுவது எதிரியின் தேர்வாகும். அதன் விளைவுகளை அவர்கள் ஏற்க வேண்டியது தவிர்க்க முடியாததாகும். பின்னர் அ.சா.1 மரணமடைந்தமையால், அவரை பொறுத்து எந்த நடவடிக்கையும் எதிரிகளால் எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. முன்பு பதிவு செய்யப்பட்ட சாட்சியம், குறிப்பாக எதிரி தரப்புக்கு குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பு இருந்தபோது, அது பயன்படுத்தப்படாத சூழலில், பின்னர் வழக்கில் பொருத்தமான சான்றாக ஏற்றுக்கொள்ளப்படலாம் என்பது நிலைபெற்ற சட்டக் கோட்பாடாகும். அதனால், அ.சா.1–ன் சாட்சியம் குறுக்கு விசாரணை செய்யப்படாததன் அடிப்படையில் மட்டும் தள்ளுபடி செய்யப்பட முடியாது. மாறாக, அது வழக்கின் மொத்த சூழ்நிலைகளுடனும், மற்ற சான்றுகளுடனும் இணைத்து பரிசீலிக்கப்படும்போது, அரசு தரப்பு வழக்கை உறுதிப்படுத்தும் முக்கியமான மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றாக கருதப்படுகிறது.

**22.**அ.சா.2 தனது சாட்சியத்தில் எதிரிகள் அ.சா.1–ஐ கீழே தள்ளி அடித்து கொண்டிருந்ததாகவும் தாங்கள் சத்தம் போட்டு ஓடவே எதிரிகள் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் அ.சா.1–க்கு இடது கண் ஓரத்தில் கல்லால் குத்தி ரத்தம் ஓடிக்கொண்டிருந்தது என்றும் அதன் பிறகு எதிரிகள் அ.சா.1 மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார் மேலும் அ.சா.2 தனது குறுக்கு விசாரணையின் போது தான் சத்தம் கேட்டு தான் சென்றேன் என்று சொன்னால் ஆமாம் என்றும் அவ்வாறு பார்க்கும் போது முனுசாமி அடிப்பட்டிருந்தார் என்றும் வேணுகோபால் ஓடிச்சென்று விட்டார் என்றும் தனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்று சொன்னால் ஆமாம்

என்றும் யார் யாரை அடித்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் முனுசாமியை வேணுகோபால் அடித்தது தெரியும் என்றும் அவர் அடிக்கும்போது தனக்கு தெரியாது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

**23.**அ.சா.3 தனது சாட்சியத்தில், தான் ஓடி சென்று பார்த்தேன் என்றும் எதிரி வேணு ஒரு கல்லால் அ.சா.1–ன் கன்னத்தில் குத்தினார் என்றும் தாங்கள் சத்தம் போட்டு ஓடியதால் எதிரிகள் அங்கிருந்து ஓடினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.3 தனது குறுக்கு விசாரணையின் பொழுது தான் அழுகும் சத்தம் கேட்டு சென்று பார்த்தபோது வேணுகோபால் கல்லால் கண்ணில் குத்திக் கொண்டிருந்து ஓடிவிட்டார் என்றும் யார் யாரை அடித்தார்கள் என்று தனக்கு நேரடியாக தெரியாது என்று சொன்னால் சரியல்ல என்றும் தான் சென்று பார்க்கும் போது கல் எடுத்து சாட்சி கண்ணை காண்பித்து அந்த இடத்தில் அடித்துக் கொண்டிருந்ததாக காண்பித்தார் என்றும் தான் ஏன்டா அடிக்கிறாய் என்று கேட்டுக் கொண்டு செல்லும் பொழுது அவர் ஓடிவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், எந்த கல்லால் தாக்கினார் என்று தனக்கு தெரியாது என்று சொன்னால் தெரியும் கருங்கல்லால் தாக்கினார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி விவரங்களை பரிசீலனை செய்கையில் மூன்றாம் தரப்பினரான அ.சா.3 எதிரி வேணுகோபால் அ.சா.1–ஐ கருங்கல்லால் கண்ணில் தாக்கியதாக தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்.

**24.**மேலும், அ.சா.4 மற்றும் அ.சா.5–ன் சாட்சியத்தை பரிசீலனை செய்கையில் அவர் சம்பவத்தை குறித்து கேள்விப்பட்ட நபர் என்பது தெரிய வருகிறது. மேலும் அ.சா.5 தனது சாட்சியத்தில் தவளக்குப்பம் கண் மருத்துவமனைக்கு சென்று பார்த்த பொழுது அ.சா.1–ஐ எதிரிகள் தன் தாத்தா கீழே விழுந்து காயம் ஏற்பட்டதாக பொய் சொல்லி சிகிச்சைக்கு சேர்த்தது தெரிய வந்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**26**.அ.சா.1 தனது சாட்சியத்தில் அடிபட்ட தன்னை எதிரிகள் தனது தாத்தா என்று பொய் சங்கதிகளை கூறி தவளக்குப்பம் கண் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்ததாக சொல்லி உள்ளார். மேலும் மேற்படி சங்கதிகளுக்கு ஒத்துரைத்து அ.சா.3 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். எதிரிகள் தரப்பில் இவ்வழக்கில் புகார் 15 நாட்கள் காலதாமதமாக கொடுக்கப்பட்டுள்ளது என்று ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் அ.சா.1 தனது புகார் மற்றும் சாட்சியத்தில் எதிரிகள் தன்னை தாத்தா என்று பொய்சங்கதிகளை கூறி தவளக்குப்பம் கண் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும் அதனால் உடனடியாக தன்னால் புகார் கொடுக்க முடியவில்லை என்றும் புகார் கொடுப்பதற்கு ஏற்பட்ட காலதாமதத்தை பொறுத்து விளக்கம் அளித்துள்ளார். மேலும் அந்த சங்கதிகளுக்கு ஒத்துரைத்து அ.சா.2 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே காலதாமதமாக புகார் கொடுத்தது மட்டுமே அரசு தரப்பு வழக்கை பாதிக்கும் வகையில் அமையாது.

**27**.மேலும் எதிரிகள் தரப்பில் இவ்வழக்கில் இரண்டு விபத்து பதிவேடுகள் பதியப்பட்டுள்ளது என்றும் இரண்டிலும் தேதி மற்றும் இடம் வேறுபாடாக உள்ளது என்றும் எடுத்துரைக்கப்பட்ட போதிலும் முதலில் அ.சா.1–ஐ எதிரிகள் தவளக்குப்பம் கண் மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும் அங்கு சிகிச்சை முடித்து வந்ததற்கு பின்னிட்டு மீண்டும் அவருக்கு கண் சரியாகததால் மீண்டும் மருத்துவமனைக்கு சென்றுள்ளார். அப்போதுதான் மேற்படி விபத்து பதிவேடானது பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேலும் அ.சா.1 தனது சாட்சியத்தில் சொல்லியுள்ளது போல தனது இடது கண்ணில் காயம் இருப்பதாகத்தான் விபத்து பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் காயம்பட்ட நபரான அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 எதிரி வேணுகோபால் கல்லால் தாக்கியது குறித்து தெளிவாக

சாட்சியம் அளித்திருக்கும் பொழுது விபத்து பதிவேடுகளில் உள்ள முரண்பாடுகளால் மட்டுமே மேற்படி சாட்சியங்களை நிராகரிக்க முடியாது.

**28.** அ.சா.1 தனது சாட்சியத்தில் தன்னை 1–வது எதிரி கல்லால் தாக்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அ.சா.1–ன் சாட்சியத்தை உறுதிப்படுத்தும் வகையில் அ.சா.3–ன் சாட்சியம் அமைந்துள்ளது. எனவே 1–வது எதிரி தாக்கியதால் அ.சா.1–க்கு காயம் ஏற்பட்டுள்ளது என்பது அ.சா.1 மற்றும் அ.சா.3–ன் சாட்சியத்தின் மூலம் நிரூபணம் ஆகிறது. இந்நிலையில் 1–வது எதிரி அ.சா.1–ஐ தாக்கியதாக சொல்லப்படும் கருங்கல்லை கைப்பற்றி தாக்கல் செய்யாத நிலையிலும் மேற்படி கருங்கல்லை வைத்து அ.சா.1–ன் கண்ணில் தாக்கியதையும், மேலும் அ.சா.1–க்கு கண்ணில் இருந்து ரத்தம் வந்ததையும் பார்வையிடும் பொழுது 1–வது எதிரி தாக்கப் பயன்படுத்திய ஆயுதம் அபாயகரமான ஆயுதம் என்பது புலனாகிறது. எனவே 1–வது எதிரி அ.சா.1–ஐ அபாயகரமான ஆயுதத்தால் கண்ணில் தாக்கி காயத்தை ஏற்படுத்தி உள்ளதால் 1–வது எதிரி மீது இ.த.ச. பிரிவு 326 இன் கீழான குற்றச்சாட்டு அரசு தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

**28.**வழக்காவணங்களை பரிசீலனை செய்கையில் 2–வது எதிரி ஆறுமுகம் ஆபாசமான வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் விடுத்ததாக அ.சா.1 சாட்சியம் அளித்திருந்தாலும் அதை உறுதி செய்யும் வகையில் எந்த சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. எனவே, 2–வது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டானது அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கின்றது. ஆனால் 1–வது எதிரி வேணுகோபால் அ.சா.1–ஐ கருங்கல்லால் தாக்கியதை பொறுத்து காயம்பட்ட அ.சா.1 மற்றும் கண்ணுற்ற சாட்சியான அ.சா.3 தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார்கள். எனவே 1–வது எதிரியை இவ்வழக்கில் பிரிவு 326 இன் கீழ்

குற்றவாளி என்று அரசு தரப்பில் போதிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்துள்ளார்கள் என்று நீதிமன்றம் தீர்மானிக்கின்றது.

முடிவாக **(i)** 1 மற்றும் 2 ம் எதிரிகளின் மீதான பிரிவுகள் 294(b), 506(ii) of IPC–ன் கீழ் குற்றச்சாட்டை அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க தவறியுள்ளது. 1 மற்றும் 2 ம் எதிரிகள் மீது பிரிவுகள் 294(b), 506(ii) of IPC– ன் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று தீர்மாணித்து கு.வி.மு.ச பிரிவு 248(1)–ன் கீழ் எதிரிகளை இந்நீதிமன்றத்தால் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. 1 வது எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டான பிரிவு 326 of IPC ஆனது அரசு தரப்பில் போதிய சாட்சிகள் மற்றும் சாண்றாவணங்கள் மூலம் எவ்வித சந்தேகத்திற்கும் அப்பாற்பட்டு நிரூப்பிக்கப்பட்டுள்ளதால் 1 ம் எதிரிக்கு வழங்கயிருந்த தண்டனை குறித்து கு.வி.மு.ச பிரிவு 248(2)–ன் கீழ் வினவியபோது, எதிரி குறைந்தபட்ச தண்டனை அளிக்கும்படி கூறினார்.

**(ii)** மேற்படி எதிரியின் பதிலினை அனுசரித்தும், குற்றத்தின் தன்மை மற்றும் வழக்கின் சங்கதிகள் ஆகியவற்றை கருத்தில்கொண்டும் 1 வது எதிரிக்கு பிரிவு 326 of IPC–ன் கீழான குற்றத்திற்கு 3 மாத காலம் சிறைதண்டனை மற்றும் ரூ.10,000/– அபராதம் செலுத்தும்படியும், அபராதம் செலுத்த தவறும் பட்சத்தில் 2 வாரம் மெயக்காவல் சிறைதண்டனை அனுபவிக்கும்படியும், கு.வி.மு.ச பிரிவு 248(2)–ன் கீழ் உத்தரவிடப்படுகிறது. வது எதிரி வழக்கு பதிவு செய்யப்பட்டபோது 6 நாட்கள் சிறையில் இருந்ததாக ஆவணங்களின் அடிப்படையில் தெரியவருவதால் 1–வது எதிரிக்கு வழங்கப்பட்டுள்ள சிறைதண்டனையில் மேற்படி 6 நாட்களை மட்டும் கழிக்கும்படி கு.வி.மு.ச 428–ன் படி உத்தரவிடப்படுகிறது.

1–வது எதிரி எழுதிக்கொடுத்த பிணைப்பத்திரம் ரத்துச்செய்ய உத்தரவிடப்படுகிறது மற்றும் 2 வது எதிரியின் பிணை பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு ரத்துச் செய்யப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் கைப்பற்றப்படவில்லை. அதனால் வழக்கு சொத்து குறித்து எந்த உத்தரவும் பிறப்பிக்கப்படவில்லை.

இந்த தீர்ப்புரை என்னால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டபின் என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை நீக்கம் செய்த பின்பு 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் நாள் ஆகிய இன்று என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.03.26 17:35:19 +0530

நீதித்துறை நடுவர் எண்.2,
திண்டிவனம்.

**பிற்சேர்க்கை**

**அரசு தரப்பு சாட்சிகள்**

1. திரு. முனுசாமி
2. திரு.பாண்டுரங்கன்
3. திரு.முருகன்
4. திரு.செல்வம்
5. திருமதி.மகாதேவி
6. திரு.சந்திரசேகரன்
7. திரு.ராபர்ட்
8. திரு.ராஜ்குமார்
9. திரு.சசிக்குமார்(காவல் உதவி ஆய்வாளர்)

**அரசு தரப்பு சான்றாவணங்கள் பட்டியல்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1 | 12.06.2023 | பார்வை மகசரில் உள்ள சாட்சியின் 1 வது கையொப்பம் |
| அ.சா.ஆ.2 | 16.12.2025 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.3 | 12.02.2026 | வாதியின் அசல் புகார் மனு |
| அ.சா.ஆ.4 | 12.02.2026 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5 | 12.02.2026 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | 12.02.2026 | பார்வை மகசர் |
| அ.சா.ஆ.7 | 12.02.2026 | பிரிவு மாற்று அறிக்கை |

**அரசு தரப்பு சான்றுபொருள் :** இல்லை.

**எதிரிகள் தரப்பு சாட்சிகள் : இல்லை**
**எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை**
**எதிரிகள் தரப்பு சான்றுபொருள்: இல்லை**

ABINAYA Digitally signed by ABINAYA Date: 2026.03.26 17:35:13 +0530

நீதித்துறை நடுவர் எண் 2.
திண்டிவனம்